# <u>ஜெயங்கொண்டம் நகராட்சி</u>

| **DATE OF MEETING OF THE COUNCIL** | **MCR NO** | **SERIAL NUMBER AND SUBJECT IN AGENDA** | **DECISION OF THE COUNCIL** |
|---|---|---|---|
| | | ஜெயங்கொண்டம் நகராட்சியில் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30.11.2021 ஆம் தேதி செவ்வாய்க் கிழமை காலை **11.00** மணி அளவில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் நடவடிக்கை,<br><br>**தனி அலுவலர்,**<br>ஜெயங்கொண்டம் நகராட்சி. | |
| 30.11.2021 | 462 | **<u>பொருள் : 1</u>**<br>ஜெயங்கொண்டம் நகராட்சி ஆணையர் அவர்களின் 11/2021 ஆம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :</u>**<br>மன்றம் பார்வையிட்டு, பதிவு செய்யலாம். | <u>அனுமதிக்கப்பட்டது</u> |
| 30.11.2021 | 463 | **<u>பொருள் : 2</u>**<br>சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது செயல்முறைகள் ந.க.எண். 19089/2021/இ2 நாள். 19.11.2021ன்படி, ஜெயங்கொண்டம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள கீழ்க்ண்ட பொதுக்கழிப்பிடங்கள் மற்றும் சமுதாயக் கழிப்பிடங்களை பராமரிப்பு பணிகளுக்கு ரூ..10.65 இலட்சத்தினை Operational & Maintenance Gap Filling Interest Fund 2021-22 நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்க்கும். | <u>அனுமதிக்கப்பட்டது</u> |

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீடுத் தொகை ரூ.(இலட்சத்தில்** |
|---|---|---|
| | **சமுதாய கழிப்பிடம்** | |
| 1. | காந்தி நகரில் சமுதாயக் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் . | 1.90 |
| 2. | சின்னவளையத்தில் சமுதாயக் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 1.50 |
| | **மொத்தம்** | **3.40** |
| | **பொதுக் கழிப்பிடம்** | |
| 1 | பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள பொதுக் கழிப்பிடத்தை மராமத்து பணிகள் மேற்கொள்ளுதல். | 2.50 |
| 2. | மேலக்குடியிருப்பு பொதுக் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 1.00 |
| 3. | கொம்மேடு சாலையில் உள்ள அண்ணா நகர் பொதுக் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் . | 0.75 |
| 4. | வேலாயுத நகரில் பொதுக் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 1.00 |
| 5. | ஜூப்ளி சாலையில் பொதுக் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 0.75 |
| 6. | கீழ்க்குடியிருப்பு பகுதியில் பொதுக் கழிப்பிடம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் . | 1.25 |
| | **மொத்தம்** | **7.25** |

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தின் முன் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

**க.எண். 5328/ 2021 / இ1**

---

30.11.2021 | 464 | அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 3**

ஜெயங்கொண்டம் நகராட்சியில் வருவாய் நிதி – 2021-2022 - ன் கீழ் ஆழ்குழாய் கிணறுகளின் மின் மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்து பராமரித்திடும் பணிகள் மேற்கொள்ள 17.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ள சதவீதம் |
|---|---|---|---|
| திரு. S.பிச்சை, ஜெயங்கொண்டம். | 4,37,002/– | 4,42,421/– | (+) 1.24% கூடுதல் |
| திரு. S. சரவணன், ஜெயங்கொண்டம். | | 4,39,187/– | (+) 0.50% கூடுதல் |
| திரு. V. நடராஜன், அங்கராயநல்லூர். | | 4,35,909/ | (-) 0.25% குறைவு |
| திரு. T. அகிலன், ஜெயங்கொண்டம் | | 4,43,776/ | (+) 1.55% கூடுதல் |

**அலுவலக குறிப்பு :**

வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு. V. நடராஜன், அங்கராயநல்லூர்** என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு.

**ந.க.எண். 1071/ 2020 / இ1**

---

30.11.2021 | **465** | அனுமதிக்கப்பட்டது

**பொருள் : 4** ஜெயங்கொண்டம் நகராட்சியில் வருவாய் நிதி – 2021-2022 - ன் கீழ் குடிநீர் பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்து பராமரித்திடும் பணிகள் மேற்கொள்ள 17.09.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள நான்கு ஒப்பந்தப்புள்ளிகளின் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை | ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| திரு. S.பிச்சை, ஜெயங்கொண்டம். | 4,32,207/– | 4,36,702/– | (+) 1.04% கூடுதல் |
| திரு. S. சரவணன், ஜெயங்கொண்டம். | | 4,35,449/– | (+) 0.75% கூடுதல் |
| திரு. V. நடராஜன், அங்கராயநல்லூர். | | 4,31,991/ | (-) 0.05% குறைவு |
| திரு. T. அகிலன், ஜெயங்கொண்டம் | | 4,38,042/ | (+) 1.35% கூடுதல் |

**அலுவலக குறிப்பு :**

| | | | |
|---|---|---|---|
| | | வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **திரு. V. நடராஜன், அங்கராயநல்லூர்** என்பவரது ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டது மன்றத்தின் பார்வைக்கு.<br><br>**ந.க.எண். 1071/ 2020 / இ1** | |
| 30.11.2021 | **466** | **பொருள் : 5**<br>ஜெயங்கொண்டம் நகராட்சி எல்லைக்குட்பட்ட **21** வார்டுகளில் டெங்கு கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள அவசர அவசியம் கருதி 09/2021 ம் மாதம் வரை தினக்கூலி அடிப்படையில் ஏற்கனவே இந்நகராட்சி துப்புரவு பணியை வெளிப்புற ஒப்பந்தம் (Out sourcing contract) மூலம் ஒப்பந்த அடிப்படையில் மேற்கொண்டு வரும் அங்கீகரிக்கப்பட்ட துரை & கோ என்ற நிறவனத்தின் மூலம் பணியாளர்களை கொண்டு பணியை செய்திட மன்றம் அனுமதி வழுங்கப்பட்டுள்ளது. எனவே தொடர்ந்து கொரோனா நோய் தொற்று நடைமுறையில் உள்ளதாலும் பொது மக்கள் நலன் கருதியும் 10/2021ம் மாதம் முதல் 12/2021 ம் வரை மேற்க்கண்ட நிறுவனமே பணியாளர்களை கொண்டு தொடர்ந்து டெங்கு கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் மற்றும் செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.<br>ந.க. எண்.834/2016/அ**1**<br>**அலுவலக குறிப்பு:-**<br>பொது மக்கள் நலன் கருதியும்,பொது சுகாதார நலன் கருதியும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது |
| 30.11.2021 | **467** | **பொருள் : 6**<br>ஜெயங்கொண்டம் நகராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணி மேற்கொள்வதற்கு தினக்கூலி பணியாளர்களை கொண்டு Out Sourcing மூலம் 2018-2019ம் ஆண்டிற்கு துப்புரவு பணி மேற்கொள்ளும் ஒப்பந்த காலம் 30.04.2019ம் தேதியுடன் முடிவடைந்து உள்ளது. 2019-2020ம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நகராட்சி நிர்வாக ஆணையருக்கு கடிதம் அனுப்பப்பட்டு உள்ளது. மேலும் கொரோனா நோய் தொற்று நடைமுறையில் உள்ளதாலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தினை முன்னிட்டும் நிர்வாக நலன் கருதி 09/2021ம் மாதம் வரை கால நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. எனவே தொடர்ந்து கொரோனா நோய் தொற்று நடைமுறையில் உள்ளதாலும் பொது சுகாதார பணியின் அவசர அவசியத்தினை முன்னிட்டும் நிர்வாக நலன் கருதியும் நகராட்சி நிர்வாக ஆணையர் ஒப்பந்தப்புள்ளி அனுமதி கிடைக்கப்பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி ஆணை வழங்கும் வரை ஏற்கனவே ஒப்புதல் அளித்த ஒப்பந்த அடிப்படையில் பணி மேற்கொண்டு வரும் அங்கீகரிக்கப்பட்ட துரை &கோ என்ற நிறுவனத்திற்கு துப்புரவு பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்பந்த அடிப்படையில் 10/2021ம் மாதம் முதல் 12/2021 ம் மாதம் வரை பணிபுரிய 134 நபர்களுக்கு தினக்கூலி ஊதியம் வழங்கிடவும், அதற்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும்ம் மன்றத்தின் முன் அனுமதிக்கு.<br>**அலுவலக குறிப்பு :-**<br>பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும், வருவாய் நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க. எண்.**238/2018**/எச்**1** | அனுமதிக்கப்பட்டது |